# பெயருக்குப் பின்னால்...

**கொளத்தூர் மணி**

வெளியீடு:
**பெரியார் திராவிடர் கழகம்**
95, டாக்டர் நடேசன் சாலை,
அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600004.
தொலைபேசி: 044-24980745
periyardk@gmail.com

## நூல் கிடைக்குமிடங்கள்


பெரியார் படிப்பகம்
பேருந்து நிலையம் அருகில்
மேட்டூர் அணை - 636 401
9786316155

பெரியார் படிப்பகம்
அரசு விரைவுப் பேருந்து நிலையம்
காந்திபுரம் - கோவை
9843323153

பெரியார் படிப்பகம்
தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம்
73 / 1 இலாயிட்ஸ் சாலை
சென்னை - 14

இராவணன் படிப்பகம்
இராதாகிருட்டிணன் நகர்
அரியாங்குப்பம்
புதுச்சேரி - 7
9443045614

பெரியார் புத்தக நிலையம்
மெக்டனால்டு சாலை, கண்டோன்மெண்ட்,
ஸ்டேட்பேங்க் மண்டல அலுவலகம் எதிரில்
திருச்சி - 620001
9865596940

**நன்கொடை: ரூ.10.00**

விமர்சனங்களை அனுப்ப - periyardk@gmail.com

மின் நூலாகத் தரவிறக்கம் செய்ய
www.periyardk.org

பதிப்பு ஆண்டு : 2012 ஜனவரி


## முன்னுரை

*மனிதர்களை அடையாளப்படுத்தவே பெயர் சூட்டும் வழக்கம் வந்தது. உடை, உணவு, வழிபாடு, வாழ்க்கை முறைகளில் திணிக்கப்பட்ட சாதிய அடையாளங்கள் பெயர்களையும் விட்டு வைக்கவில்லை. பொருள் புரியாமல் இழிவான பெயர்களை சூட்டிக்கொள்வதில் பெருமை பெற்றான் தமிழன். இந்தப் பெயர் சூட்டலிலும் பண்பாட்டுப் புரட்சியை தொடங்கி வைத்தார் பெரியார்; மொழித்தூய்மையை விட முதன்மையானது இழிவு ஒழிப்பு என்ற சமூகப் பார்வையோடு பெரியார் - பார்ப்பன எதிர்ப் பாளர்களையும், இனத்துக்கு தொண்டாற்றி யவர்களையும் பெயர்களாகச் சூட்டினார்.*

*அப்படிப் பெயருக்குப் பின்னால் மறைந்து நிற்கும் சமூகஅடையாளங்களை விளக்கி கழகத் தலைவர்* ***தோழர் கொளத்தூர் மணி*** *ஆற்றிய சிறப்பான உரையே, இந்த நூல்.*

***- பெரியார் திராவிடர் கழகம்***

**10.10.2007 அன்று தூத்துக்குடி கழகத் தோழர் ச.த.பிரபாகரன்-மாரீசுவரி இணையரின் மகன் பெயர் சூட்டு விழாவில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.**



தோழர் பிரபாகரன் தோழர் மாரீஸ்வரி ஆகியோருடைய குழந்தைக்கு பெயர் சூட்டும் இந்த விழாவில் தலைமையேற்று செய்திகளை பகிர்ந்து கொண்டு அமர்ந்திருக்கின்ற தோழர்களே இந்த விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற உறவினர்களே, நண்பர்களே, தோழர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெயர் சூட்டு விழா என்பதை இவ்வளவு பெரிய நிகழ்ச்சி யாக முயற்சி எடுத்து செய்து, செலவழித்து செய்து, செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எங்களால் மட்டுப்படுத்த முயற்சி செய் தாலும் அவர் மிக உற்சாகமாக அதை ஒரு சிறந்த நிகழ்ச்சியாக, சிறப்பு நிகழ்ச்சியாக நடத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு இப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்திருக் கிறார்கள். ஒரு மாலை நேர நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சியில், பெயர் சூட்டுவது என்பது வழக்கமாக எல்லா வீடுகளிலும் நடப்பது தான். குழந்தைகளுக்கு. நாம் சூட்டவில்லை என்றாலும் பள்ளியில் சேர்க்கின்ற போது ஆசிரியர்கள் சூட்டிவிடுவார்கள் பெயரை. இருந்தாலும் பெயர் சூட்டுவதில் அது ஒரு அடையாளமாக, குழந்தைக்கு ஒரு அடையாளமாக அந்தக் குழந்தையின் பெற்றோர்களும் குடும்பமும் கொண்டிருக்கிற கொள்கைக்கு ஒரு அடையாளமாக, அவர்களுடைய எதிர்பார்ப்பிற்கு, இலக்கிற்கு ஒரு அடையாள மாக என்றெல்லாம் அந்த பெயரை சூட்டிக்கொள்வது தான் இப்போது வழக்கமாக இருக்கிறது.

சுருட்டையன் என்பார்கள் சடையன் என்பார்கள், குண்டன் என்பார்கள். நெட்டையன் என்பார்கள், குட்டையன் என்பார்கள் இப்படி நமக்கெல்லாம் பெயர்கள் இருந்த காலம் ஒன்று இருந்தது. அவையெல்லாம் நம்மை அடையாளங்களை சொல்லி பெயர் சூட்டுவது. அடையாளம் என்றால் நம் உடல் அடையாளத்தை அதிலும் அவர்களுக்கு கேலிக்குரிய இடங்களை தான் நமக்கு பெயர் சூட்டுவதற்காக அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். நம்முடைய பெற்றோர்கள்

நமக்கு பெயர் சூட்டினாலும் அது நிலைப் பதில்லை. அப்படி இருந்ததற்கு ஒரு சாதாரணமான, இயல்பான ஒன்று என்று கருதிவிடாதீர்கள். அது திட்டமிட்டு செய்யப்பட்ட முயற்சி என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்படித்தான் நாம் வாழ வேண்டும் - உழைக்கும் மக்களை அதற்கு மேல் அவர்களுக்கு என்று உரிமைகளைக் கொடுத்துவிடக் கூடாது என்று இந்த நாட்டின் ஒரு - வைதீக மொழியில் சொன்னால் - சாபக்கேடாக இருக்கின்ற பார்ப்பனர்கள் நம்முடைய ஏமாளித் தனத்தை தங்களுக்கு சாதகமாக்கிக் கொண்டு தொடர்ந்து சுரண்டிக் கொண்டிருந்த அவர்கள், உழைப்பாளிகளை கேவலப் படுத்த வேண்டும் என்பதிலும் அவர்கள் உரிமை கேட்டு குரல் எழுப்பக்கூடாது என்பதிலும் மிகவும் அக்கறையோடு இருந்ததினுடைய வெளிப்பாடுகள் தான் எல்லா வாழ்வியல் நிகழ்வு களிலும் எல்லா செய்திகளிலும் காட்டியிருக்கிறார்கள்.

நாம் இந்த நாட்டில் முழுமனிதர்களாக ஆகவேண்டும் என்றால் விலங்குகளாக இருந்து மனிதனாக மாறினான் என்று தான் நம்முடைய அறிவியல் விளக்குகிறது. விலங்கு நிலையில் இருந்து மனிதனாக எப்போது மாறினோம் ? விலங்குகள் இயற்கையை அப்படியே பயன்படுத்திக் கொள்ளும். சாப்பிட வேண்டுமா இருக்கின்ற இரையை அப்படியே அடித்துச் சாப்பிடும் அல்லது இருக்கிற பழத்தை அல்லது தாவரங்களை சாப்பிட்டு வாழ்வது தான் விலங்குகளாக இருந்தது. குடியிருப்பதற்கு குடியிருப்பு என்ற ஒன்று கிடையாது. இருக்கிற இடத்தில் மழையில் நனைந்து வெயிலில் காய்ந்திருக்க வேண்டியது தான். கொஞ்சம் வளர்ந்த குரங்குகள் எல்லாம் குகைக்குள் போய் இருக்கும் அவ்வளவு தான். மனிதனாக எப்போது முழுமனிதனானான் என்றால் இயற்கையை தன் வசதிக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டவன் தான் மனிதனானான். குடியிருப்பதற்கு என்று ஒரு குடிசை. அது பின்னால் வளர்ந்து வீடு, கான்கிரீட் எப்படியோ ஆகி இருக்கலாம். உணவை பத்திரப்படுத்தி, பதப்படுத்தி சாப்பிடும் முறை - இப்படி பலவற்றில் மனிதன் இயற்கையை தன் வசதிக்காக மாற்றிக் கொண்டான். இன்னும் கொஞ்சம் வேகமாக போக வேண்டும் என்கிற போது பெரிய வீடுகள் கட்டும் போது தனிமனிதன் கட்ட முடியாது மற்றவர்களை வைத்து கட்டிக் கொண்டான். அதை வேகமாக கட்ட அதற்கான புதிய புதிய பொருள்களை, இயந்திரங்களை உற்பத்தி செய்தான். வேகமாக செல்வதற்கு நடந்து போனவன் வண்டியை பயன்படுத்தினான். அப்புறம் சைக்கிள் வந்தது, கார் வந்தது, விமானங்கள் வந்துவிட்டன. இதையெல்லாம் செய்வதற்கு மனிதனுடைய உழைப்பு தேவைப்பட்டது. அந்த உழைப்பின் வழியாகத்தான், இயற்கையும் உழைப்பும் தான் புதிய எல்லா கண்டுபிடிப்புகளுக்கும் காரணமாக இருந்தன.

அப்படியானால் நாமெல்லாம் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கிற இயற்கையை பாதுகாக்க வேண்டும். எல்லா வற்றையும் உற்பத்தி செய்து தருகிற உழைப்பாளிகளைப் பாது காக்க வேண்டும். இயற்கையை மதிக்க வேண்டும், உழைப்பாளி களை மதிக்க வேண்டும். இது தான் இயல்பாக இருக்க வேண்டிய ஒரு தத்துவம். ஆனால் இந்த நாட்டிற்கு கொடுமையாக வாய்ந்த ஒரு வாய்ப்பு உழைப்பாளிகள், உழைக்கும் பிரிவு, உற்பத்தியில் தன்னுடைய உழைப்பை செலுத்தி இந்த நாட்டின் வளங்களை எல்லாம் உண்டாக்கும் பிரிவு கேவலப்படுத்தப்பட்டு, அவமானப் படுத்தப் பட்டு, எல்லா உரிமைகளும் மறுக்கப்பட்டு தான் வைக்கப் பட்டிருந்தது மிக நீண்ட காலமாக. வரலாறு தெரிந்த காலத்தில் இருந்து பௌத்த இந்தியாவிற்கு பின்னால் இந்து இந்தியா உண்டான காலத்தில் இருந்து நமக்கெல்லாம் எல்லா உரிமை களும் மறுக்கப்பட்டுத் தான் இருந்தது. உற்பத்தி செய்கிற உழைப்பாளி களுக்கு மரியாதை இல்லை. மனித குலத்தை மறு உற்பத்தி செய்கிற பெண்களுக்கு மரியாதை இல்லை. இரண்டு உற்பத்தியாளர்களும் அடிமைகளாக, உரிமையற்றவர்களாகத் தான் தொடர்ந்து வைத்திருந்தார்கள். அவர்களுக்காக எழுந்த, உரிமை குரல் எழுப்பி வந்த பல்வேறு தலைவர்கள் பல்வேறு கட்டங்களில் நம்மை கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றிச் சென்றிருக்கிறார்கள். அதற்காக முனைப்பெடுத்து முயற்சி செய்யா விட்டாலும் கூட நம்மை அடக்கி ஆள வந்த ஆங்கிலேயன் கூட- அவன் கொடுத்த சில வாய்ப்புகள் அவனுக்கு அதில் நன்மை இருந்தாலும் - நமக்கும் நன்மைகள் இருந்தன.

நம்முடைய ஒடுக்கப்பட்ட மக்களுக்கு பொதுக்கல்வி என்பது மறுக்கப்பட்டே இருந்தது. ஆனால் நம்முடைய தமிழர் வரலாற்றில் ஒரு காலத்தில் நாமெல்லாம் இலக்கியத்தை எல்லாம் படித்தவர்களுக்கு தெரியும் யார் யாரோ எல்லாம் பாட்டெழுதி இருப்பார்கள் சங்க இலக்கியங்களை. சங்ககால இலக்கியங்களை ஆண்கள் எழுதியிருக்கிறார்கள், பெண்கள் எழுதியிருக்கிறார்கள். இப்போது போல படித்த பிரிவினர்கள் மட்டும் எழுதவில்லை. கொல்லன் அழிசி எழுதியிருக்கிறான். தாமோதர வண்ணக்கன் எழுதியிருக்கிறான். கூல வாணிகன் சாத்தன் எழுதியிருக்கிறான். இப்படி எல்லா தொழில் செய்தவர் களும் மளிகை கடை வைத்திருக்கிறவர் பாட்டெழுதி இருக்கிறார். கொல்லன் பாட் டெழுதியிருக்கிறார். பேரையூர் பெருந்தச்சன் பாடல் எழுதி யிருக்கிறார். சலவை தொழிலாளி பாட்டெழுதியிருக்கிறார். எல்லோரும் பாட்டெழுதியிருக் கிறார்கள். பெண்கள் எழுதியிருக்கிறார்கள். வேட்டுவப்பெண் இளவெயினி பாட்டெழுதி இருக்கிறாள். அவ்வை, காக்கைப் பாடினி, வெண்ணிக்குயத்தி, நக்கண்ணை என பல பெண்கள் எழுதியிருக்கிறார்கள்.

இப்படியெல்லாம் எல்லா சமுதாயத்தை சேர்ந்தவர்களும் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் அறிவாளியாக இருந்த காலம் ஒன்று இருந்தது. ஆனால் ஒரு 200, 300 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னால் பொதுக்கல்வி உரிமை நமக்கு மறுக்கப்பட்ட காரணத்தால் உயர்சாதியாக கருதப்பட்டவர்களை தவிர மற்ற யாருக்கும் படிக்கின்ற வாய்ப்பே இல்லை. சுரண்ட வந்த ஆங்கிலேயன் கொடுத்த பொதுக்கல்வி தான் அதன் வழியாக பெற்ற கொஞ்சம் அறிவு தான் நம்மை சிந்திக்க வைத்தது. ஏன் நாம் அடிமை என கேட்க வைத்தது. அதனுடைய தொடர்ச்சியாக வாழ்வினுடைய எல்லா தளங்களிலும் நாம் சிந்திக்கத் தொடங்கினோம். அதில் ஒன்று தான் இந்த பெயர் சூட்டு விழா. வாழ்வியல் நிகழ்வுகளையும் நம்முடைய மானத்தையும் அறிவையும் "மானமும் அறிவும் மனிதருக்கு அழகு" என்று சொன்ன பெரியார் தான் வாழ்வியல் நிகழ்ச்சியில் எல்லாம் மானத்திற்கு கேடானவற்றை விலக்கி விடுங்கள் என்று சொன்னார். என்ன மானத்திற்கு கேடானது ?



தோழர் பிரபாகரன் என்னை அழைத்தார். மற்றவர்களை அழைத்திருக்கிறார்கள். எல்லோரும் வந்திருக்கிறார்கள். தோழர் களாக, நணபர்களாக, சமத்துவம் உள்ளவர்களாகத் தான் அவரும் கருதுகிறார் நாங்களும் எண்ணுகிறோம். ஆனால் நாம் சடங்குகளுக்கு அழைப்போம். வழக்கமாக இந்துக்களாக இருந்த சமுதாயம் அனைததிற்கும் பார்ப்பனர்களை அழைப்பார்கள். அவர்கள் வருகிற போது யாராவது பெயர் சூட்ட தலைவரை கூப்பிட்ட மாதிரி நாங்கள் ஏன் கூப்பிடக்கூடாது என்று சொல்ல முடியாது. அவன் சொல்லுவான் எனக்கு மட்டும் தான் அந்த உரிமையுண்டு. உங்களுக்கு இல்லை. உங்களுக்கு திருமணம் செய்து கொள்ள உரிமையில்லை. பார்ப்பானுக்கு மட்டும் தான் திருமணம் செய்கிற உரிமை. பூணூல் போடுகிற ஜாதிக்கு தான் உண்டு. நமக்கு பூணூல் போட்டு தற்காலிகமாக உயர்வு கொடுத்து கல்யாணம் செய்து வைத்து பிறகு பூணூலைக் கழட்டிவிட்டு போய் விடுவான். அப்ப திருமணம் செய்யக்கூட அவன் பூணூல் போட்டால் தான் அவன் வந்து தான் செய்ய வேண்டும். நம்முடைய நண்பர்களாக விருந்தினர்களாக வருவதில் நமக்கு மறுப்பில்லை. வந்தால் நண்பராக வரட்டும் விருந்துண்டு போகட்டும். மகிழ்ச்சி. ஆனால் நம்மை இழிந்தவன் எனக்கு மட்டும் உரிமையுண்டு என்று வருகிற போது மானத்திற்கு கேடான அவனை அழைக்காதீர்கள் என்று பெரியார் சொன்னார்.

அறிவுக்கு கேடான சடங்குகளை விட்டுவிடுங்கள். இரவு நேரத்தில் விளக்கு தேவை தான். ஆனால் பகலில்கூட பந்தம் பிடித்துக் கொண்டு தான் போவோம். அல்லது வெயில் நேரத்தில் குடை தேவை தான். ஆனால் இரவு நேரங்களில் குடை பிடித்துக் கொண்டு போனோம் நாம். அற்பனுக்கு காலம் வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் அப்படி நம்மாளு சடங்குகளில் செய்தான். இதெல்லாம் அறிவுக்கு புறம்பானது. தேவையான வற்றை வைத்துவிட்டு தேவையற்றதை விலக்கி விடுங்கள் என்று சொன்னார் பெரியார். அது தான் "மானமும் அறிவும் மனிதருக்கு அழகு" என்பதினுடைய பொருள். அந்த அடிப்படையில் நாங்கள் தோழர்களாக கூட்டுப்பணியாளர் களாக கருதிக்கொண்டு இந்த நிகழ்ச்சிக்கு நாங்கள் எல்லாம் வந்திருக்கிறோம். அல்லது இந்த

பெயர் சூட்டல் என்கிற போது கூட ஒரு அடையாளம் என்று சொன்னேன். அதில் யார் என்று கூட தெரிந்து கொள்ள முடிந்தது ஒரு காலத்தில். தமிழர்கள் வைத்துக் கொண்ட பெயரை வைத்து தெரிந்து கொள்ளலாம். இந்துக்களாக இருப்பவருடைய பெயரை வைத்து அவன் ஜாதியைக் கூட தெரிந்து கொள்ளலாம். குப்புசாமி, குப்பண்ணன், குப்பன் என்றெல்லாம் பெயர்கள் இருக்கும். குப்புசாமி என்றால் உயர்சாதிக்காரர். குப்பண்ணன் என்றால் அடுத்தநிலை. குப்பன் என்றால் கடைசி நிலை. ராமசுவாமி என்றால் வேறு, ராமண்ணன் என்றால் வேறு, ராமன் என்றால் வேறு.

இப்படியெல்லாம் அந்த பெயரில் கூட ஒட்டுக்களை சேர்க்கிற போது கூட நமக்கு ஒரு மரியாதைக்காக சிலதெல்லாம் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் அடையாளமாக பார்க்கிற போது கூட கிருத்துவராக இருப்பார் அவருடைய பெயரை பார்த்தால் மதலைமுத்தாக இருக்கும், ஆரோக்கிய நாதன் என்று பெயர் வைத்துக் கொள்வார். தேவசகாயம் என்று பெயர் இருக்கும். பார்க்கிற போது தெரியும் செல்வமேரி இருப்பார். புஷ்பமேரி இருப்பார். சகாயமேரி இருப்பார். இவர்களை எல்லாம் பார்த்தால் இரண்டு செய்திகள் தெரியும். ஒன்று இவர் கிருத்துவர் இன்னொன்று தமிழ் பேசும் கிருத்துவர். சக்கரை மைதீன், நாகூர் மீரான், அல்லா பிச்சை இசுலாமியர்கள் பெயர் வைத்திருப்பார்கள். இசுலாமியர், தமிழ் பேசும் இசுலாமியர் என்று தெரியும். (சுருக்கி சுருக்கி பெயர்களை சுருக்கி மூன்றெழுத்திற்குள் தான் இருக்க வேண்டும் எதென்றாலும். அப்ப பொருளோடு இல்லை.) தமிழில் இல்லை என்றாலும் கூட நான் சொன்ன சகாய மேரி, ஆரோக்கிய நாதன் எல்லாம் கூட வடமொழி தான். ஆனாலும் கூட தமிழர்கள் வடமொழியை தன் மொழியாக கருதிக் கொள்வதை போல திணித்திருந்ததால் அதையும் தமிழ் என்று நினைத்து வைத்துக் கொண்டிருந் தார்கள் அவ்வளவு தான். ஆக பெயரை சூட்டுகிற போது கொஞ்சம் அடையாளம் இருக்க வேண்டும் என்று ஒரு எண்ணம். பெயரில் தான் பெயரின் முன்னால் ச, த பிரபாகரன் என்றால் சரி அவங்க தாத்தா பெயர் அப்பா பெயர் ஊர்பெயர்



முன்னெழுத்தாக சிலவற்றை போட்டுக் கொள்கிறார்கள். முன்னெழுத்து அப்பா பெயர், தாத்தா பெயர், ஊர் பெயர் போடுவது தான் என்றில்லை பலவகையில் போட்டுக் கொண்டார்கள்.

ஏ.ராமசாமி முதலியார் என்பவர் இருந்தார். பெரிய பொருளியல் அறிஞர். அவருடைய தம்பி ஏ.லட்சுமணசாமி முதலியார் பல்கலைக் கழக துணை வேந்தராக இருந்தவர் பெரிய மருத்துவர். ராமசாமி முதலியார் மகன் பெயரும் ஏ.கிருஷ்ண சாமி தான். நமக்கு ஆச்சரியமாக இருக்கும். என்னடா இது பெயர் அப்பன் பெயர் ஏ.ராமசாமி இவர் ஆர்.கிருஷ்ணசாமி என்று தானே இருக்க வேண்டும் என்று. அவர் ஆற்காடு ராமசாமி முதலியார் இவர் ஆற்காடு கிருஷ்ணசாமி. அப்ப முன்னெழுத்து என்பது எதற்காகவோ வைத்துக் கொண் டார்கள். அப்பா பெயரை அம்மா பெயரை வைத்துக் கொண்டு முன்னெழுத்து போட்டார்கள். எம்.எஸ்.சுப்புலட்சுமி என்ற ஒரு பெரிய பாடகி இருந்தார். நம்மாளுக்கு நம்மாளு என்றே தெரியாது. தமிழச்சி என்று யாருக்கும் தெரியாது பாப்பாத்தி என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். பாப்பாத்தியாகிப் போனவர். இசைவேளாளர் சமுதாயத்தில் பிறந்து பார்ப்பானை கல்யாணம் செய்து பாப்பாத்தியாகிப் போனவர். அவர்களுக்கு எம்.எஸ்.சுப்புலட்சுமி எப்படியென்றால் மதுரை சண்முக வடிவுடைய மகள் சுப்பு லட்சுமி. அம்மா பெயர் தான். அப்பா பெயர் இல்லை அது. இசை வேளாளர் சமுதாயத்தில் பிறந்ததால் தன்னுடைய அம்மா பெயரை தான் முன்னெழுத் தாக போட்டார்கள். மதுரை சண்முக வடிவு சுப்புலட்சுமி. வி.என்.ஜானகி வைக்கம் நாராயணியம்மாள் ஜானகி. அம்மா பெயர் தான். ஒவ்வொரு பெயரும் அம்மா பெயர் தான். இப்படி பெயர்கள் இருந்தது. முன்னெழுத்தை அப்படித் தான் போட்டுக் கொண்டார்கள். சில பேர் இன்னும் மலையாளப் பக்கம் சென்றீர்கள் என்றால் வீட்டுப்பெயரை வீட்டிற்கு என்று ஒரு பெயர் இருக்கும். என்னுடைய நண்பர் ஒருவர் இருந்தார் ஐயப்பன் என்று. அவருடைய மகன் பெயர் சுகுமார். ஐயப்பன் பெயரும் P .ஐயப்பன் மகன் பெயரும் P சுகுமார். என்னங்க

என்றால் எங்க வீட்டிற்கு பெயர் Poovalli house. அந்த வீட்டுக்கு பெயர். அதனால் எங்கள் வீட்டுப்பெயரை முன்னெழுத்தாக வைத்துக் கொள்வோம். எதிலாவது என்றால் ஒரு அடையாளம் காரணம் இருந்தது. இப்போது பரவலாக தாய் தந்தையரின் பெயர்களை குழந்தைகளுக்கு முன்னெழுத்தாக போட்டுக்கொள்கிறார்கள். முதலில் பெரியாரியக்கத் தோழர்கள் குடும்பத்தில்தான் இதை நடைமுறைபடுத்தினார்கள். இதை பின்பற்றி அனைவரும் தாய்தந்தையர்களின் பெயர்களை முன் எழுத்துக்களாக போட்டுக் கொள்கிறார்கள். இது வரவேற்கத்தக்கதும் பாராட்டுதலுக்கும் உரியதாகும். அது போல் தான் பெயரிலும் ஒரு காரணம் வேண்டும். அப்ப நான் சொன்னேன் நமக்கான பெயர்கள் எல்லாம் எப்படி இருந்திருக்கின்றன என்றால் சடையன், வயிறன், மண்ணாங்கட்டி இப்படித் தான் நமக்கு பெயர். ஏன் ?

நமக்கு தெரியுமோ தெரியாதோ இந்த நாட்டில் வாழ்ந்த மக்களை ஆட்டிக் கொண்டிருந்தது, இயக்கிக் கொண்டிருந்தது எல்லாம் ஒரு சட்ட புத்தகம் இப்போதெல்லாம் Civil Procedure Code உரிமையியல் நடைமுறைச் சட்டம் இருக்கிறது Criminal Prodecure Code குற்றவியல் நடைமுறைச் சட்டம் இருக்கிறது Indian Penal Code இந்திய தண்டனைச் சட்டம் இருக்கிறது குற்றவியல் நடைமுறை சட்டங்கள், உரிமையியல் சட்டங்கள் எல்லாம் இருக்கிறது எல்லாம் சேர்ந்து இந்து சமுதாயத்திற்கு என்று ஒரு சட்டம் புத்தகம் இருந்தது "மனு தர்ம சாஸ்திரம்". ஒவ்வொருவருக்கும் என்ன உரிமை என்பதும் அது சொல்கிறது உரிமை மீறலுக்கு என்ன தண்டனை என்பதும் அது தான் சொல்லியது. நம்மாள் எல்லாம் கொலை பண்ணிவிட்டால் அவனுக்கு மரண தண்டனை. பார்ப்பான் கொலை செய்து விட்டால் அவனுக்கு இரண்டு மயிரை மட்டும் வெட்டிவிட்டு விட்டுவிடு. நமக்கு உயிரை எடுப்பான் அவனுக்கு கொஞ்சம் மயிரை மட்டும் எடுப்பான். மனு தர்மம் அப்படி சொன்னது. கொலைக்கு கூட. அப்படியெல்லாம் ஒன்றும் சட்டம் இப்போது இல்லை அப்போது இருந்தது. அப்படிப்பட்ட சட்டப்புத்தகம் சிலவற்றை சொன்னது. என்னென்ன எல்லாம் பெயர் வைத்துக் கொள்ளலாம் ஒருத்தர்.



இப்பொழுதெல்லாம் நம்மாட்கள் எல்லாம் உயர்சாதிக் காரன் என்று பூணூல் போட்டுக் கொள்வதை எல்லாம் பார்த் திருப்பீர்கள். அவன் ஒத்துக் கொள்ளமாட்டான் யார் பூணூல் போட்டாலும் அவன் போட்டால் தான் அதற்கு மதிப்பு. நம்மெல் லாம் போட்டால் அதற்கு மதிப்பு கிடையாது. எதுக்குப்பா எல்லாம் சாவியை தொங்கவிட்டு கொள்ளலாம். அதற்கு வேண்டு மானால் பயன்படும். பத்திரமாக சாவி வைத்துக் கொள்ளலாம் கட்டி தொங்கவிட்டுக் கொள்ளலாம் பூணூலில். இல்லை என்றால் குளிக்கும் போது முதுகு தேய்த்துக் கொள்ளலாம். நம்ம பூணூலுக்கு அவ்வளவு தான் மதிப்பு. அவங்க பூணூலுக்கு தான் அதிக மதிப்பு. அந்த பூணூலை கூட எப்படி போட்டுக் கொள்ள வேண்டுமென்று சொன்னான். பார்ப்பான் மட்டும் தான் நூலால் ஆன பஞ்சால் ஆன பூணூலை போட்டுக்கொள்ள வேண்டும். சத்திரியர்கள் சணப்பை நூலால் ஆன பூணூலை போட்டுக் கொள்ள வேண்டும். வைசியர்கள் செட்டியார்கள் ஆட்டு மயிரால் ஆன பூணூலை போட்டுக் கொள்ள வேண்டும். அப்படித்தான் மனு தர்மம் சொல்கிறது. இப்ப நம்மாளுக எல்லாம் போட்டுக் கொள்கிறான் நூலிலேயே, அதெல்லாம் கிடைப்ப தில்லையே என்று. அது போல பெயர் சூட்டுவதும் எப்படிச் சூட்ட வேண்டும் என்று வைத்திருக் கிறார்கள். அவன் வகுத்து வைத்திருக்கிறான். எப்படி பெயர் வைத்துக் கொள்ள வேண்டும் என்று கூட வைத்திருக்கிறான்.

பிரமாணர்களுக்கு மங்கலத்தை சொல்லும் பெயர்களை வைக்க வேண்டும். சத்திரியர்களுக்கு வீரத்தை சொல்லும் பெயரை வைக்க வேண்டும். வைசியர்களுக்கு செல்வத்தை குறிக்கும் பெயரை வைக்க வேண்டும். இது மூன்று வரைக்கும் பிரச்சனை இல்லை. என்னவோ வைத்துக் கொண்டு போ. எங்களுக்கு என்னவென்று தான் நாம் கேட்போம். நாமெல்லாம் சூத்திரர்கள் தான். அப்ப நமக்கு என்ன பெயர் ? நம்மை வேண்டுமானால் அப்புறம் பிரித்துவிட்டான். அது வேறு. நாலு ஐந்தெல்லாம் பிரித்தான். ஆனால் முதலில் இருந்தது நான்கு தான். சூத்திரர்களுள் தான் எல்லோரும். அப்ப அவர்களுக்கு என்ன பெயர் என்றால் இழிவை காட்டும் பெயர்களை வைக்க

வேண்டும். அதை நான் சொல்லுவதைவிட படித்துக் காட்டுவது தான் சரியாக இருக்கும். பிராமணனுக்கு மங்கலத்தையும், சத்திரியனுக்கு பலத்தையும், வைசியனுக்கு பொருளையும், சூத்திரனுக்கு தாழ்வையும் காட்டுகிறதான பெயரை இட வேண்டும் என்பது பிராமணனுக்கு சர்மா என்பதையும் சத்ரியனுக்கு வர்மா என்பதையும் வைசியனுக்கு பூபதி என்பதையும் சூத்திரனுக்கு தாசன் என்பதையும் தொடர் பெயராக வைத்துக் கொள்ளலாம். இதற்கு சொல்லியிருக் கிறான் பெயர் வைப்பது கூட வைத்துக் கொள்ளலாம் என்று தாசன் என்று பின்னால் வைத்துக் கொள்ள லாம். அவனுக்கு அடிமையாக இருக்கிறேன் என்று பொருள். இன்னாருக்கு அடிமை என்று சொல்லிக் கொள்ளலாம். பாரதிக்கு அடிமை பாரதிதாசன் என்று வைத்துக் கொண்டது மாதிரி. ஒரு வீரம் பேசிய சுயமரியாதை பேசிய கவிஞர் கூட அப்படி ஒரு பெயரை வைக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. அவருக்கு என்னவென்று தெரியாது.

நாம் கோயிலுக்கு போகிறோம். கோயிலுக்குள் நம்பிக்கை யோடு போகின்றவர்களை யாரும் கும்பிடப் போனால் தடுக்கிற தில்லை. ஆனால் சில பேர் போனால் ஒரு இடத்தில் நின்று கொள்வார்கள். அடுத்தவர்கள் இன்னும் கொஞ்சம் பக்கத்தில் போகலாம் என்றிருப்பார்கள். காசு இருக்கின்றவன் இன்னும் கொஞ்சம் பக்கத்தில் போவான். ஐயருக்கு காசு கொடுத்துவிட்டு கூட நல்லா பார்க்கலாம் என்று போவான். யாரும் அந்த கருவறைக்குள் நுழைய துணிச்சல் வந்ததில்லை யாருக்கும். அங்கு தடுப்பதற்கு காவலாளி போட்டெல்லாம் தடுக்க மாட்டார்கள். அதெல்லாம் விட்டுவிடுவார்கள் யார் வேண்டுமானால் போனால் என்ன ? எப்போதாவது யாராவது தடுத்து நாம் நின்றிருக்கிறோமா என்றால் நாமே முடிவு பண்ணிவிட்டோம் நாம் போகக்கூடாது மனுதர்மத்தை படித்தவன் இல்லை; யாரும் போகமாட்டார்கள். ஏன் ? நம்மை அறியாமல் நம் மூளைக்குள் அந்த செய்திகளை பதிய வைத்திருக்கிறான்.



நாமெல்லாம் மனுதர்மத்தை படித்ததில்லை. ஆனால் பெயர் அப்படித்தான் நம்ம பெரியவர்கள் எல்லாம் வைத்துக் கொண்டிருந்தார்கள். என்ன பெயர் என்றே தெரியாது. அப்படி நம்ம அரசர்கள் காலத்திலே கூட அரசர்கள் எல்லாம் தொடக்க காலத்தில் மூவேந்தர்கள் எல்லாம் பெயர்கள் வைத்திருந் தார்கள். நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன், சேரலாதன் பெயரெல்லாம் அழகான தமிழ் பெயராகத் தான் வைத்திருந் தார்கள். அதையெல்லாம் ஆரியர்கள் வந்து நமக்கெல்லாம் பெரிய சோழப் பேரரசன் நமக்கெல்லாம் பெரிய மரியாதையை வாங்கி கொடுத்தவன் தஞ்சை பெரிய கோயிலை கட்டினான் என்றெல்லாம் புகழ்வோம் ராஜராஜன் இவன் தான் முதலில் சமஸ்கிருதத்திற்கு அடிமையாகி நம்மை அடிமையாக்க வைத்ததில் தொடக்கம் அங்கே தான் தொடங்கியது. அருள் மொழித்தேவன் என்ற அழகான தமிழ்ப் பெயரை கொண்டவன் ராஜராஜனாக மாறினான். இதற்கும் அவனுடைய உண்மையான பெயர் இயற்கையான பெயர் இயற்கை பெயர் அவனுக்கு இயற் பெயர் அருள்மொழிதேவன். அருள்மொழிதேவன் தன்னுடைய பெயரை ராஜராஜன் என்று மாற்றிக்கொண்டான். அவனுக்கு பெருமை அப்படி வைத்துக் கொண்டால் தான் பெருமை என்று அவன் கருதத் தொடங்கினான் அவனை பார்த்து நம்மாளெல் லாம் கற்றுக்கொண்டான். அவர் தலைவர் பண்ணுகிறார் அரசர் பண்ணுகிறார் என்றெல்லாம் பின்பற்றி செய்வதை போல அப்படிச் செய்தார்கள்.

அந்த அடிப்படையிலே தான் பல பெயர்கள் மாறியது வடமொழியானது. சரி வடமொழியானால் கூட பரவாயில்லை ஏதாவது நமக்கு பொருள் தெரியுமா ? எப்படி நாம் கருவறைக்கு வெளியே நிற்பதற்கான காரணம் தெரியாதோ அப்படி பெயருக்கு பொருளும் தெரியாது. கேவலமான பொருள் உள்ள பெயர்களை எல்லாம் வைத்துக் கொண்டிருப்போம். நீங்கள் யாரிடமாவது போய் லிங்கம் என்றால் என்னவென்று புராணத்தை படித்து கேளுங்கள். அப்புறம் தான் மகாலிங்கம், பூதலிங்கத்திற்கு எல்லாம் பொருள் தெரியும் நமக்கு. அதை கூட விட்டுவிடுங்கள். அதைவிட சில பெயர்கள் எல்லாம் நமக்கு

அர்த்தம் தெரியாது. இப்போது நவநீதகிருஷ்ணன் என்று பெயர் வைக்கிறார்கள். தமிழில் அதற்கு என்ன பொருள் என்றால் வெண்ணெய் தின்கிற கண்ணன் என்று பொருள். நவநீத கிருஷ்ணன் என்றால் வெண்ணெய் தின்கிற கரியன் என்று அர்த்தம். கிருஷ்ணன் என்றால் கருப்பன் என்று அர்த்தம். இருளன் என்று பொருள். வெண்ணெய் தின்கிற கண்ணன் அவ்வளவு தான். நவநீதகிருஷ்ணன் என்றால் அந்தப்பொருள். வெறும் நவநீதம் என்று வைத்தால் என்ன பொருள் ? வெண்ணெய் என்று அர்த்தம். இப்போது நாம் அப்படி பெயர் வைத்துக் கொளகிறோம். கோபம் வந்தால் டே வெண்ணெய் என்று திட்டுவதுண்டு. ஆனால் பெயரே வைத்துக் கொள்கிறோம். ஏனென்றால் நமக்கு பொருள் தெரியாது.

விசாலாட்சி என்று ஒரு காலத்தில் பெயர் இருந்தது அகல மான கண்களை உடையவள் என்று பெயர். விசாலாட்சி என்றால் விசாலமான கண்களை உடையவள். மீனாட்சி என்றால் மீனை போன்ற கண்களை உடையவள். அகலமான கண்களை உடையவள் தடங்கயற்கண்ணி என்று தமிழில் வைப்பது மாதிரி. இப்ப விசாலி என்று பெயர் வைத்திருப்பது நமக்கு தெரியும் கண்ணதாசனுடைய பொண்ணு. அகலமான கண்களை உடையவள் என்பது விசாலாட்சி. வெறும் விசாலி என்றால் என்ன அர்த்தம் அகலமானவள் என்று அர்த்தம். அப்படின்னா என்ன குண்டீ; குண்டச்சி என்று அர்த்தம். அது தான் அர்த்தம். நமக்கு பொருள் தெரியாமல் வைத்துக் கொண்டிருக்கிறோம். அப்ப தமிழில் வைத்துக் கொண்டால் பொருள் தெரிந்து வைத்துக் கொள்ளலாம் அவ்வளவு தான் வேறொன்றும் சொல்லவில்லை. தமிழில் இருந்தால் பொருள் தெரிந்து வைக்கலாம். பொருள் தெரியாமல் வைக்க வேண்டியதில்லை.

பூவராகவன் என்றால் நிலத்தில் திரிகிற பன்றி என்று அர்த்தம். அதைதான் வைத்திருக்கிறார்கள் நிறைய பேர்கள் பெயர். கடவுள் பெயர் என்று வைத்திருக்கிறார்கள். ஏனென்றால் பன்றி அவதாரமாக போய் கடலில் வைத்திருந்த பூமியை எடுத்துக் கொண்டு வந்தாராம். நாமும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்



நிறைய. கடலுக்குள் இருந்தது என்றால் மீனாக போகலாம், திமிங்கலமாக போகலாம், முதலையாக போகலாம் எடுத்துக் கொண்டு வருவதற்கு வசதியாக இருக்கும். பன்றியாக போய் எப்படி எடுத்து வருவது என்று யாரும் கேட்டதில்லை. அவன் சொன்னான் நாமும் நம்பிவிட்டோம். படம் போட்டு வைத்திருப் போம் அந்த கொம்பில் வந்து பூமி இருப்பது மாதிரி படம் போட்டு வைத்திருப்போம். அவர் தான் பூவராகவன். இப்படி யெல்லாம் பெயர் வைத்துக் கொள்வதற்கு மாறாகத் தான் தமிழில் பெயர் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வந்தது. அப்புறம் கொஞ்சம் பேர் பெயர் வைத்தார்கள் மாற்றிக் கொண் டார்கள் தங்களது பெயரை.

சாமிநாதன் என்று இருந்தவர் அண்ணல்தங்கோ என்று பெயரை மாற்றிக் கொண்டார். வேதாச்சலம் மறைமலை அடிகள் ஆனார். இப்படி நிறைய பேர். சூரியநாராயண சாஸ்திரி பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக்கொண்டார் அதை யெல்லாம் எல்லாம் நாம் படிக்கிறோம். ராமையா நெடுஞ் செழியன் அப்ப எல்லாம் சொல்லுவோம். பெயர் மாறியதே தவிர அதிலுள்ள செய்தி மாறவில்லை. அண்ணல்தங்கோ என்றாலும் சாமிநாதன் என்றாலும் கடவுளுக்கு துணையாக இருப்பவன் என்று தான் பொருள். எப்படி இருந்தாலும் அது தான் பொருள். கந்தசாமி என்பவர் இறையன் என்று மாற்றிக்கொண்டார். லட்சுமி என்பவர் திருமகள் என்று மாற்றிக் கொண்டால் அந்த புராணத்தில் உள்ள சிந்தனைகள் அப்படியே இருக்கிறது. மொழி வேண்டுமென்றால் தமிழ். பெரியார் சொல்லுவார் கடைசியாக அவர் 1972இல் மாநாட்டில் பேசுகின்ற போது கலைஞரைப் பற்றி கொஞ்சம் கோபமாக பேசுகிறார். ஓடாத தேரை ஓட்டினேன் அப்படி இப்படி என்று சொன்னதற்கு அப்புறம் கொஞ்சம் கோபம். “என்ன நம்மாளுக வந்து என்ன மாறியிருக்குது அவன் பக்தவச்சலம் கும்பாபிசேகம் பண்ணினார். நம்ம கருணாநிதி குடமுழுக்கு பண்றாரு அவ்வளவு தானே வித்தியாசம்” என்றார். பெயர் தமிழில் இருக்கிறது அவ்வளவு தான். செய்தி அதே தான். முட்டாள்தனம் தானே நடக்கிறது தொடர்ந்து. அவர் கும்பாபி சேகம் பண்ணுகிறார்

இவர் குடமுழுக்கு பண்ணுகிறார் அவ்வளவு தானே வித்தியாசம் என்று சொன்னார் பெரியார். அப்படி பெயர் மாற்றுவதில் நமக்கு பயனில்லை. பெயர் தமிழில் இருக்கவேண்டும் என்பதுடன் நமக்கான சிந்தனைகளையும் கொடுக்க வேண்டும்.

அப்ப வெறும் தமிழில் இருந்தால் மட்டும் போதுமா என்றால் நிறைய பெயர் பெரியாரோ, பெரியார் இயக்கம் வைத்த பெயரோ வேறு பெயரும் வைத்திருக்கிறார்கள். பெரியார் இயக்கத்தை சார்ந்தவர்கள் பலபேர் தங்களுடைய பொது வுடைமை சார்பை காட்டுவதற்காக லெனின் என்ற பெயரை ஸ்டாலின் என்ற பெயரை மார்க்ஸ் என்ற பெயரை ரஷ்யா என்ற பெயரை மாஸ்கோ என்ற பெயரை வைத்துக் கொண்டார்கள். அது தமிழ் இல்லை. ஆனால் தாங்கள் வரித்துக்கொண்ட கொள்கையை, ஏற்றுக்கொண்ட கொள்கையை உயர்த்திப் பிடிப்பதற்கான ஒரு முயற்சி. ஆங்கில பெயர்களை இங்கர்சால் என்று பெயர் வைத்துக் கொண்டார்கள். சாக்ரடீஸ் என்று வைத்துக் கொண்டார்கள். அது தமிழ் இல்லை. ஆனால் தங்களுடைய சிந்தனையை தங்களுடைய பகுத்தறிவு வேட்கையை அது காட்டியது. இப்ப கூட சில பேர் பிரபாகரன் என்ற பெயர் இவருக்கு இருக்கிறது. ஆனால் இப்ப குழந்தை களுக்கு நிறைய பேர் சூட்டிக்கொள்கிறார்கள். பிரபாகரன், திலீபன் என்று நிறைய பெயர் வைக்கிறார்கள். அது தமிழ் பெயர் அல்ல. ஆனால் அது ஈழத்தின் நம்முடைய தமிழினத்தில் ஒருவனாவது மானத்தோடு போராடுகிறான் நாம் தான் மானம் கெட்டு அடிமையாக இருக்கிறோம் ஒருவனாவது அந்நிய ஆட்சியில் இருந்து விடுபட வேண்டும் என்று போராடுகிறானே அவனுடைய கருத்துக்கு ஆதரவாக நிற்போம் எங்களுக்கும் அப்படிப்பட்ட விடுதலை வேட்கை இருக்கிறது என்பதை காட்டு வதற்காக அந்தப் பெயரை அவர்கள் வைத்துக் கொள்கிறார்கள். ஆக தமிழ் பெயர் இல்லையென்றாலும் தாங்கள் வரித்துக் கொண்ட அல்லது உயர்த்திப்பிடிக்க நினைக்கிற கொள்கை களைச் சொல்லுவதற்கு சில பெயரை வைத்துக் கொள் கிறார்கள். அப்படிப்பட்ட வகையில் தான் பெயர்சூட்டு.



ஏனென்றால் நாம் வந்து பண்பாடு என்பது மற்றவர்களை பார்த்து பார்த்து நம்மாள் புதிதாக கற்றுக்கொள்வது எல்லாம் கலாசாரம், பண்பாடு என்பது ஒன்றை கொண்டு வந்து திணிக்கிற போது மனுதர்மம் எல்லாம் நமக்கு சொந்தமேயல்ல. நமக்கு என்னவென்றே தெரியாது . அவன் ஏதோ சொன்னான் அரசன் ஏற்றுக்கொண்டான் நாமெல்லாம் ஏற்றுக்கொண்டோம்.

கென்யா நாட்டில் விடுதலை போர் நடந்தது. அந்த விடுதலை போரை நடத்தியவர் தலைமையேற்ற நடத்தியவர் டாக்டர் கென்யாட்டா என்பவர். அவர் தான் ஒரு கதையை சொன்னார். ஆங்கிலேயர்கள் எங்கள் நாட்டிற்கு வந்தார்கள். அவர்கள் வந்தபோது நாடு எங்கள் கையில் இருந்தது. அங்கிருந்து ஆங்கிலேயர்கள் வந்தார்கள். பாதிரிகள் முதலில் வந்தார்கள். கையில் பைபிளை எடுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் வந்த போது நாடு எங்கள் கையில் இருந்தது பைபிள் அவர்கள் கையில் இருந்தது. வந்து கண்ணை மூடிக்கொண்டு ஜபம் செய்யச் சொன்னார்கள். ஜபம் செய்தோம், கண்ணை திறந்து பார்த்தோம். பைபிள் எங்கள் கையில் இருந்தது நாடு அவர்கள் கையில் இருந்தது என்று சொன்னார். ஒரு கலாசாரத்தை புதிய பண்பாட்டை புதிய மதத்தை கொண்டு வருகின்ற போது கூடவே ஆளுகையும் அடக்குமுறையும் ஆதிக்கமும் நாடு கைப்பற்றுதலும் வந்து விடுகிறது என்பதற்கு மனுதர்மமும் ஒரு எடுத்துக் காட்டு. அவர் சொன்ன எடுத்துக் காட்டு அவர் நாட்டிற்கு.

அதனுடைய தொடர்ச்சி தான் அதிலிருந்து விடுபட வேண்டும் வாழ்வியலுடைய எல்லா தளங்களிலும் இந்த அடிமை பிடியிலிருந்து நாம் விடுபட வேண்டும் என்ற முயற்சி தான் பெரியார் ஒவ்வொரு துறையாக மேற்கொண்டார்.எனவே வாழ்வியல் சடங்குகளில் பார்ப்பனர்களை அழைக்காதீர்கள். பெயர் சூட்டலில் நம்முடைய தமிழ் பெயரை சூட்டுங்கள் என்று சொன்னார். இப்படி ஒவ்வொன்றிலும் அவன் ராமாயணத் தையும், மகாபாரதத்தையும் தூக்கிப்பிடித்த போது பெரியார் திருக்குறளை படியுங்கள் என்று சொன்னார். திருக்குறள் மாநாடு

பெரியார் தான் நடத்தினார். புலவர்கள் நிறைய பேர்கள் படித்தார்கள். படித்துவிட்டு அவன் அலமாரியில் வைத்துக் கொண்டான். மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை.பெரியார் எடுத்துச்சென்றார். அவனுடையது நமக்கு எதிரானதப்பா அவன் பழக்கமே வேற நம்மளது வேற அவன் வந்து நாலு ஜாதியா ஆண்டவன் படைத்தான் என்று அவன் சொல்லு கிறான். பிரம்மா படைக்கிற போதே நான்காக படிநிலையாகத் தான் படைத்தான். மற்ற மதங்கள் எல்லாம் இருக்கிறது. நம்மையெல்லாம் இந்து முன்னணிக்காரன் கேள்வி கேட்பான். ஏன்பா எங்களை மட்டும் இந்துக்களை மட்டும் திட்டுகிறாய் மற்றவர்களை திட்டவில்லை என்று. நீ திட்டுகிறாயா நீ திட்டிக்கொள். எங்க வேலையை நாங்கள் பண்ணுகிறோம் உன் வேலைகளை நீ பண்ணு . நம்மை கேட்பான். ஆனால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது.

எந்த மதமும் மற்ற மதங்கள் எதுவும் எங்கள் மக்களை இழிவுபடுத்தவில்லை, தாழ்த்தவில்லை. அது எல்லோரையும் தன்னுடைய மதத்துக்காரன் என்று மட்டுமே பார்த்தது. ஆனால் நடைமுறையில் எப்படி இருந்தாலும் கோட்பாடு அளவிலாவது ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்று மற்ற மதங்கள் எல்லாம் சொல்லியது. நம்ம ஊரிலேயே கிறிஸ்துவ மதம் இருக்கிறது. சர்ச்சில் சில இடங்களில் எல்லாம் நடுவில் சுவர் கட்டி இந்தப்பக்கம் நீ உட்கார் இந்தப் பக்கம் நீ உட்கார் என்று சொல்லுவது இருக்கிறது. அது நம்ம ஊருக்கு வந்த பிறகு பெற்ற வியாதி. அது மதத்தில் இல்லை அது. அதை நடைமுறைப்படுத்த நம்ம ஊருக்கு வந்தவன் இதை கொஞ்சம் சேர்த்துக் கொண்டான். ஆனால் இந்து மதத்தில் மட்டும் தான் பிரம்மா படைக்கிற போதே பிரித்து பிரித்து படைத்தான். நெற்றி யிலிருந்து பிராமணனை படைத்தார், தோளிலிருந்து சத்ரியனை படைத்தார், தொடையிலிருந்து வைசியனை படைத்தார், காலிலிருந்து சூத்திரனை படைத்தார். நம்மை எல்லாம் காலில் பிறந்த ஜாதி என்று விட்டான். ஆண்டவன் படைக்கிற போதே ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்பது மற்ற மதங்கள், ஆண்டவர் முன் அனைவரும் சமம் இல்லை என்பதை தத்துவமாக கொண்டது தான் இந்து மதம்.



ஒரு பண்பாடு, தமிழ் என்று வருகிற போது நம்ம நிறைய வற்றை புதுசு பார்த்து பார்த்து எது புதுசா இருந்தாலும் நம்மாளு பிடித்துக் கொள்வான். பெயராக இருந்தாலும் சரி எதுவாக இருந்தாலும் சரி. இப்ப நம்ம பெண்கள் எல்லாம் நகை போடுவது குறைந்து போய் இப்ப குஜராத்தி பெண்களை பார்த்து காது பூராவும் குத்திக் கொள்கிறார்கள். முதலில் அப்படியெல்லாம் இருந்ததில்லை. ஒரு குத்து குத்தியிருந்தாங்க அதை கூட கிராமத்து பெண்கள்... என்று கிண்டல் பண்ணினான். குங்குமம் எல்லாம் நெற்றியில் இருந்து வகிடிற்கு ஏறிவிட்டது இப்ப. புருவ மத்தியிலிருந்து வகிடிற்கு அதெல்லாம் குஜராத்தி பெண்களை பார்த்து. புடவை இப்படித்தான் கட்டுவது இப்பெல்லாம் திருமணங்களில் பார்த்தீர்கள் என்றால் நம்ம பெண்கள் எல்லாம் இப்படிக் கட்டாமல் இப்படி திருப்பிக் கட்டிக் கொண்டிருக்கும். வடநாட்டானை பார்த்து பார்த்து இப்படி பலவற்றில் நாம் மாறிக்கொண்டிருக்கிறோம். என்ன வென்றால் அவன் ஏதோ நம்மைவிட உயர்ந்தவன் என்று நாமே கருதிக் கொண்டிருக் கிறோம். அவன் நம்மை ஆள்பவனாக நினைத்துக் கொண்டு நாம் அடிமைகளாக கருதிக்கொண்டு ராஜாவை பார்த்து மக்கள் நடப்பதை போல வடநாட்டானை பார்த்து நாம் பலவற்றை செய்து கொண்டிருக்கிறோம். அதிலிருந்து மாற்றமாகத் தான் இந்த பெயர் சூட்டுதலில் கூட ஏதேனும் ஒரு கொள்கையை முன்னிறுத்தி ஒரு அடையாளத்தை முன்வைத்து வைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆசையில் தான் நம்முடைய தோழர் இப்படிப்பட்ட ஒரு பெயர் சூட்டு விழாவை கூட்டி உங்களை எல்லாம் அழைத்து எங்களையும் வந்து நாலு செய்திகளை சொல்லி பேச வைத்திருக்கிறார்.

நாங்களும் பெயர் சூட்டுகிற போது அவருக்கு ஒரு ஆசை. நான் இன்றைக்கு ஏதோ ஒரு பெயரை சூட்டலாம் என்று கருதிக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் சில நிபந்தனைகளை வைத்தார். இப்படியெல்லாம் செய்யவேண்டும். எப்படி நிபந்தனை அளித்து பெயர் வைக்க சொன்னார். என்ன பெயர் என்றால் வேறொன்றும் அவர் அதிக நிபந்தனை வைக்க வில்லை. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் போராடிக் கொண் டிருக்கிற

அதற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஏதாவது ஒரு போராளியினுடைய பெயர் எங்கள் பையனுக்கு வைக்க வேண்டும் என்று விரும்பினார் அவர். அவருக்கு அது தான் விருப்பம். அதற்கு மேல் விருப்பமில்லை. எங்களுக்கு எந்த நிபந்தனையும் அதற்கு மேல் வைக்கவில்லை அது ஒன்றை வைத்தார். சரி உடனே நாம் அதிகமாக நினைப்பது உடனே வைத்தால் பிரபாகரன் என்ற பெயரை அப்பாவே கொண்டுள்ளார். அடுத்து சில பேர் ஆயிரம் கத்திகள் இருக்கும் கத்தியை கையில் தான் வைத்திருப்பான் எதற்கு என்றால் கடைசியில் தற்கொலை செய்து கொள்ளத் தான் வைத்திருப்பான். அதற்கு மேல் சண்டை போடுவதற்கு வைத்திருக்க மாட்டான்.

நம்ம நாட்டில் உண்ணாவிரதம் இருந்தது. உண்ணாவிரதம் நிறைய பேர் இருந்திருக்கிறார்கள். காந்தி சாகும்வரை உண்ணா விரதம் 15 தடவை இருந்திருக்கிறார். பார்ப்பான் சுட்டுத்தான் செத்தார். உண்ணாவிரதத்தில் சாகவே இல்லை. சாகும்வரை உண்ணாவிரதம் அறிவித்தார் அவர் உண்ணா விரதத்தில் சாகவில்லை. மாஸ்டர் தாராசிங் என்று ஒருத்தர் சீக்கியர்களுக்கு தனிநாடு வேண்டும் காலிஸ்தான் வேண்டும் என்று 48 நாள் உண்ணாவிரதம் இருந்து கைவிட்டார். அவர் கடைசியில் செருப்பு துடைக்கப் போனார் கோயிலில். குருத் வாராவில் போய் செருப்பு துடை என்று போட்டார்கள். நம்ம சங்கரலிங்கம் என்பவர் விருதுநகர் சங்கரலிங்கம் சென்னை ராஜ்ஜியம் என்று பெயர் இருந்தது. தமிழ்நாடு என்று பெயர் வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்து இறந்தார். அது 40 , 45 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்தது. ஆந்திர மாநிலத்தை தனியாக பிரியுங்கள் என்று பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்தார். அவரும் 45 நாள் 48 நாள் உண்ணாவிரதம் இருந்து இறந்தார்.

ஆனால் அதே உண்ணாவிரதம் என்கின்ற ஆயுதத்தை ஒரு வீரன் கையில் எடுத்தால் எப்படியிருக்கும் என்பதை திலீபன் காட்டினான். 12 நாள் உண்ணாவிரதம் என்றால் எதுவும் உள்ளே போகக்கூடாது. எச்சில் கூட உள்ளே போகாது என்று 12 நாளில் இறந்தான். அப்படி ஒரு கோழை ஆயுதமாக நாம் கருதுகிற



போராட்டத்தை கூட வல்லவன் கையில் எடுத்தால் அது எப்படிப் பட்ட பலமான ஆயுதம் என்பதை திலீபன் மெய்ப்பித்தான். அதை வைக்கலாம் என்று நினைத்தால் நம்ம தோழர் மதன் அதற்கு முன்பு வைத்துவிட்டார் அவர் பையனுக்கு என்று கூறி விட்டார். போச்சுடா என்னடா பண்றது ? அடுத்து ஒரு பெயரை வைக்கலாம் என்றால் இன்றைய நாள் நினைவுக்கு வந்தது. இன்றைக்கு 10ம் தேதி. இந்த 10-10-2007 என்பது 20 ஆண்டுகளுக்கு முன்னால் இந்த நாளில் தான் இந்திய அமைதிப்படை ஈழம் போனது. ஈழத்தமிழர்களை என்று காப்பாற்ற போன அமைதிப்படை அமைதியை குலைத்து ஈழ மக்களை தாக்க தொடங்கிய நாள் இன்று தான். அக்டோபர் 10ம் நாளில் தான் குண்டு வீசி தாக்குதலை தொடங்கிய நாள். இந்த நாளில் கூட உலகநாடுகளில் எல்லாம் போர் நடந்திருக்கிறது எல்லா நாட்டிலும் நடந்தால் சில விதிவிலக்குகளை வைப்பார்கள். மருத்துவமனை மீது குண்டு போடக்கூடாது. செய்தி நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. சில விதி விலக்குகள் எல்லாம் வைப்பார்கள். மத நிறுவனங்கள் மீது கோயில் மீது குண்டு போடக்கூடாது. இப்படி பல விதி விலக்குகள் எல்லாம் உண்டு.

அப்ப புலிகள் தங்களுக்கு எதிரிகளாக காட்டி முன்வைத்து போராடுகிற சிங்களர்களை எதிர்த்து ரொம்ப நாள் போராடுகிறார்கள். ஒரு நாள் கூட சிங்களவர் மருத்துவமனை மீது குண்டு போடவில்லை இந்தியா போற வரைக்கும். அதற்கு பின்னால் அவனும் போட்டான் இந்தியாவை பார்த்து கற்றுக் கொண்டான். ஒரு பத்திரிகை அலுவலகம் தாக்கப் பட்டதில்லை ஆனால் 1987 அக்டோபர் 10ஆம் நாளில் தான் ஈழநாதம், உதயம் போன்ற தமிழ் நாளேடுகளுடைய அலுவலகத்தின் மீது முதல் குண்டு போட்டார்கள். இன்று காலை 10ஆம் தேதி காலை 7 ½ மணிக்கு குண்டு வீசினார்கள். அன்று போன ஒரு படையை மாலதி என்கிற ஒரு பெண் புலி தடுத்து நிறுத்தி கோப்பாயில் போரிட்டு அவர்கள் அன்று இறந்து போன முதல் பெண் விடுதலைப்புலி இறந்தது கூட இன்றைக்கு தான். மாலதி என்ற பெண் தான் முதல் விடுதலைப்புலி போராளி இன்றைக்கு

சரியாக 20 ஆண்டுகளுக்கு முன்னால் மறைந்து போனார் போரில். அப்படி அமைதிப்படைக்கும் அவர்களுக்கும் வந்த பிரச்சனை அதில் ஏன் முறுகல் நிலை வந்தது என்பதற்கு ஒரு காரணம் உண்டு. இந்தியா அமைதி ஒப்பந்தம் என்று போட்டு இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தம் அதை நிறைவேற்று வதற்காக பிரபாகரனும் ஏற்றுக்கொண்டு அறிவித்த பின்னால் கூட போராளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு என்று சொல்லிவிட்ட பின்னாலும் கடலில் "கடல்புறா" என்ற ஒரு படகில் போய்க் கொண்டிருந்த ஈழப்போராளிகள் கைது செய்யப்பட்டார்கள்.

யாரால் ? இந்திய அரசால். எந்த இந்திய அரசு ? இந்த ஒப்பந்தத்தின் பின்னால் அனைவருக்கும் பொது விடுதலை போராளிகள் குற்றவாளியாக கருதப்படமாட்டார்கள் என்று சொன்னதோ அதே இந்திய அரசு 12 ஈழப் போராளிகளை கைது செய்தது. "கடல் புறாவில் " பயணம் செய்த அக்டோபர் 3ஆம் தேதி கைது செய்தது. சரி கைது செய்து போனால் விசாரி. என்னப்பா உண்மை என்று கேட்டு விட்டு விடுவார்கள்.5ஆம் நாள் அவர்களை கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் இலங்கை சிங்கள அரசு அழுத்தம் கொடுத்தது. "எங்கிட்ட கொடு நீ விசாரிக்காதே என்கிட்ட கொடு நான் கொண்டு போய் கொழும்பில் விசாரிக்கிறேன்" ஏன் கேட்டார்கள் ? அதில் முக்கியமான ஒருவர் இருந்தார். புலேந்திரன் என்ற ஒரு போராளி. பிரபாகரன் என்ற பெயருக்கு சிங்களர்கள் அஞ்சியதை விட புலேந்திரன் என்ற பெயரை கேட்டால் சிங்கள படை அதிகம் அஞ்சத்தக்க அளவிற்கு பெரும் வீரன். ஏராளமான விடுதலைப்புலிகளுக்கு பயிற்சி கொடுத்து அவர்களை போராளிகளாக மாற்றிய வீரன். முதன்முதல் பெண்களுக்கான பயிற்சி முகாம் வந்த போது தலைமையேற்று நடத்திய சிறப்புக்கு உரியவன். இன்னும் சொல்லப்போனால் எனக்கு இன்னும் நெருக்கமான நண்பன் கூட. எப்படி என்றால் ஈழ விடுதலைப் புலிகள் தங்களுக்கான ஆயுத பயிற்சியை எடுக்க வேண்டுமென்று இந்தியா நோக்கி வந்த போது பயிற்சிக்கான இடங்களை தேர்ந்தெடுத்தார்கள். தேடினார்கள் அதில் அவர்களுக்கு விருப்பமான ஒரு இடம் கிடைத்தது எங்கள் தோட்டமாக போய்விட்டது. அது காடு களை ஒட்டி இருந்தது. பக்கத்தில் ஆறு இருந்ததால் கடற்புலி பயிற்சிக்கும் வசதியாக இருந்தது. 3 ஆண்டு காலம் ஒரு 1200 போராளிகள் பயிற்சி எடுத்தார்கள் அங்கு.

அவரோடு இன்னும் இரண்டு பேருக்கும் மூன்று பேருக்கும் ஜுலை மாதம் 1987 ஜுலையில் விமானத்தை வீழ்த்துகிற ஏவுகணைப் பயிற்சி இந்தியாவில் வழங்கப்பட்டது. இந்தியாவில் தான் வழங்கப்பட்டது. பயிற்சியை முடித்து இங்கிருக்கிற பேரூரில், தான் விரும்பிய பெண்ணை அமைதி ஏற்பட்டுவிட்டது என்ற நம்பிக்கையோடு திருமணமும் செய்து கொண்டு இலங்கைக்கு திரும்பினவன் தான் இந்திய அமைதிப்படையால் கைது செய்யப்பட்டான். திருமணமாகி 3 மாதங்களில் கைது செய்யப்பட்டான். 3 நாட்களில் கொழும்பிற்கு அனுப்ப துணிந்த போது தான் புலிகள் மறுப்பு தெரிவித்தும் "நீங்கள் ஒப்பந்தம் வந்த பின்னால் நீங்கள் விசாரிக்கலாம். சிங்களன் எப்படி விசாரிப்பது. பொது மன்னிப்பு அளித்த பின்னால்" என்று மறுப்பு தெரிவித்த பின்னாலும் அனுப்ப தொடங்கிய போது தான் இயக்கத்திற்கு என்று சில கொள்கையை நடைமுறைகளை வைத்திருந்தார்கள் கட்டுப்பாடு களை வைத்திருந்தார்கள். எதிரியின் கையில் சிக்கினால் அவன் சித்ரவதை செய்வான் என்ற பயத்தால் அல்ல செய்திகளை கறந்துவிடுவான் என்ற எச்சரிக்கை உணர்வால் யாரும் உயிரோடு அவர்கள் கையில் கிடைக்கக் கூடாது என்பதால் அவர்களாக விரும்பி தங்களை அழித்துக் கொண்டார்கள் 12 பேர். குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 பேர். அப்படிப்பட்ட அந்த மாவீரன் புலேந்திரன் புலிகள் இயக்கத்தில் பெரும் தளபதியாக இருந்தவன். அந்த புலேந்திரன் நினைவாக நம்முடைய தோழர் மாரீஸ்வரி தோழர் பிரபாகரன் அவர்களுடைய குழந்தைக்கு "யாழ் புலேந்திரன்" என்ற பெயரை சூட்டுகிறேன்.

அன்பார்ந்த தோழர்களே இதை வாழ்த்துரையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. வாழ்த்துரை என்பது பெரியார் சொல்லுவார் வாழ்த்தினால் ஒருவன் வாழ்வான், ஏசினால்

ஒருவன் ஒழிந்து போவான் என்பது உண்மையாக இருந்தால் இந்த நாட்டில் யாரும் உயிரோடு இருக்க முடியாது என்று சொல்லுவார். ஏனென்றால் பாதி பேர் அடுத்தவனை திட்டிக்கொண்டு தான் இருப்பான். ஒருத்தனுக்கு ஒருத்தன் திட்டி சாபம் விட்டு சாவான் என்பது எப்படி உண்மையில்லையோ எப்படி தவறோ அது போல வாழ்த்தினால் வாழ்வான் என்பதும் உண்மையில்லை என்றாலும் கூட வெறும் வாழ்க என்று சொல்லாமல் இந்த மாதிரி வாழுங்கள் இப்படி வாழ்க என்று சொல்லுவது தான் நோக்கம் நானும் அவர்களை வாழத்து கிறேன். இனஉணர்வோடு வாழ்க! பகுத்தறிவோடு வாழ்க!! சமுதாயத்திற்கு பயன்படுகிற வாழ்க்கையை வாழ்க !!! என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

***10.10.2007 அன்று தூத்துக்குடி கழகத் தோழர் ச.த.பிரபாகரன்-மாரீசுவரி இணையரின் மகன் பெயர் சூட்டுவிழாவில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.***